# சாராம்சம்


## ச.நா.நி (IMF) உலக வங்கி ஆ.அ.வ.(ADB)ன் நோக்கம்

# தனியார்மயமாக்கல்

# இலங்கையில் பெருந்தோட்டத்துறையின் கொள்ளையடிப்பு

அமேசன் புத்தகங்கள் - *'IMF, World Bank & ADB Agenda on Privatisation – Vol. 1 : Pillage of the Plantations in Sri Lanka'*


http://www.consultants21.com/fraud-&-corruption-exposures-new.php




*அளவு - 8.25" X 11" - பக்கங்கள் 248*

இந்த புத்தகத்தில் தெளிவாக காட்டப்பட்டிருப்பது யாதெனில், இலங்கைப் பொருளாதார வரலாற்றின் மூலைக் கல்லும் தேசிய சொத்தும் விலை மதிக்கமுடியாத பெருந்தோட்டத்துறைகளான தேயிலை இறப்பர் என்பன IMF ,உலக வங்கி மற்றும் ADB என்பவற்றின் தேவைக்கேற்ப தனியார்மயமாக்கப்பட்டமையாகும்.

இந்த பெருந்தோட்டங்களானது, 1974 டிசம்பர் பேர்னாட் சொய்சா அறிக்கை என்று அறியப்பட்ட நிறுவன வீடுகள் மற்றும் தரகர் நிறுவனங்கள் மீதான விசாரணை கமிஷனின் அறிக்கையில் பெருந்தோட்டங்களுக்கு ஆபத்தான முறைகேடான நடவடிக்கைகளை வழிப்படுத்தியதன் பின்னர் தேசிய மயமாக்கப்பட்டன. இந்த தோட்டங்களின் கணிசமான நீதியானது கொழும்பு நகரை மையமாக கொண்ட வீட்டு நிறுவனங்களோடு இணைந்திருந்ததோடு மேலும் பல விடயங்களுடன் இந்த நிறுவனங்கள் தோட்டங்களின் பிரதான பங்குதாரர்களாகவும் இருந்ததினால் ஊழியர்களுக்கு நியாயமாக கிடைக்க வேண்டிய நிலுவையும் கிடைக்கவில்லை. ஆதாரம் :



SESSIONAL PAPER No. XII—1974

Report of the Commission of Inquiry on Agency Houses and Brokering Firms


*Printed on the Orders of Government*

December, 1974

PRINTED AT THE DEPARTMENT OF GOVERNMENT PRINTING, SRI LANKA (CEYLON)

TO BE PURCHASED AT THE GOVERNMENT PUBLICATIONS BUREAU, P. O. BOX 500, SECRETARIAT, COLOMBO

Price: Rs. 25.25 Postage: Re. 1.75



G-G. O. No. N. 130/71

By His Excellency William Gopallawa, Member of the Most Excellent Order of the British Empire, Governor-General and Commander-in-Chief of the Island of Ceylon and Its Dependencies.

W. GOPALLAWA

To: Bernard Soysa, Esquire, M. P.
Dr. (Mrs.) Visakha Kumari Jayawardena
Dr. Buddhadasa Hewavitharana
Patabendi Muhandiramge Wimalasena Wijayasuriya, Esquire
Nagaratnam Nagenthiram, Esquire
Dr. Suriyapatabendige Terrence Garvin Fernando, and
Kenneth Shinya, Esquire.

GREETINGS:

WHEREAS it appears to me to be necessary to appoint a Commission of Inquiry for the purposes hereinafter mentioned.

Now, therefore, I, William Gopallawa, Governor-General, reposing great trust and confidence in your prudence, ability and fidelity, do, in pursuance of the provisions of section 2 of the Commissions of Inquiry Act (Chapter 393), by these presents appoint you the said—

Bernard Soysa, Esquire, M. P.
Dr. (Mrs.) Visakha Kumari Jayawardena
Dr. Buddhadasa Hewavitharana
Patabendi Muhandiramge Wimalasena Wijayasuriya, Esquire
Nagaratnam Nagenthiram, Esquire
Dr. Suriyapatabendige Terrence Garvin Fernando, and
Kenneth Shinya, Esquire.


be my Commissioners for the purpose of inquiring into and reporting on the following matters:

(1) the structure, organization and operation of—

(i) businesses, in Ceylon, whose activities consist of or include the management (in any of its aspects), on behalf of local or foreign principals, of any agricultural or trading ventures producing or trading in tea, rubber, coconut or other Ceylon agricultural produce whether or not such principals are themselves agents or trustees (which said businesses are hereinafter referred to as "Agency Houses"); and

*இந்த தோட்டங்களின் தனியார்மயமாக்களானது புதிரான முறையிலும் எழுந்தமானமாக கோவிக்குரிய முறையிலும் இடம்பெற்றதாலும் மிகச் சரியான முறையில் இவ்விடயத்திற்கு "பெருந்தோட்டத்தின் கொள்ளையடிப்பு" என இப்புத்தகத்திற்கு பெயரிடப்பட்டுள்ளது. நூலாசிரியர் இந்த தனியார் மயமாக்கல் நடவடிக்கைகளை மிகவும் துல்லியமாக விசாரணை செய்து தகுந்த ஆதாரங்களோடு மனதை அதிர வைக்கும் விதமாக இந்த தேசிய பெறுமதியான சொத்துக்களானது இலங்கை அரசாங்கத்திற்கும் பொதுமக்களுக்கும் கேடு விளைவிக்கும் முகமாகவும் நாட்டம் ஏற்படும் வகையிலும் இடம்பெற்றுள்ளன என்பதனை வெளிச்சத்திற்கு கொண்டுவந்துள்ளார். முக்கியமானதும், தேவையானதுமான பல தரவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளது இந்த புத்தகத்தின் சிறப்பம்சமாகும்.*

*பெப்ரவரி 1995ல் அப்போதைய நிதியமைச்சின் செயலாளரான A .S . ஜெயவர்தனவினால் தலைமை தங்கப்பட்ட ஐந்து நிபுணர்கள் அடங்கிய குழுவானது தேசிய, பொது மற்றும் ஊழியர்கள் போன்ற அனைத்து பங்குதாரர்களினதும் கருத்துக்களை கேட்டு ஆராய்ந்து முன்மொழிவுகள் பலவற்றை கொண்ட அறிக்கை ஒன்றை தயாரித்திருந்தது. தனியார் மயமாக்கல் நடைமுறைகளானது நிதியமைச்சின் குழுவின் முன் மொழிவுகளுக்கமைவாக இடம்பெற்றிருப்பதாக உத்தேசிக்கப்பட்டுள்ளது.நூலாசிரியரினால் இந்த குழுவின் தலைவருக்கு நீண்ட சமர்ப்பனங்கள் கொடுக்கப்பட்டது, அந்த பரிந்துரைகள் இந்த புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.*




Report of the Committee Appointed to Inquire into

State Sector Plantations

February 1995

Ministry of Public Administration, Home Affairs, Plantation Industries and Parliamentary Affairs, No. 55/75, Vaxhall Lane, Colombo 2



MINISTRY OF PUBLIC ADMINISTRATION, HOME AFFAIRS, PLANTATION INDUSTRIES AND PARLIAMENTARY AFFAIRS

Plantation Industries Division

6th February 1995

My No. MPI/6/1/174

Hon. Rathnasiri Wickramanayake,
Minister of Public Administration, Home Affairs,
Plantation Industries and Parliamentary Affairs,
Plantation Industries Division of the
Ministry of Public Administration,
Home Affairs, Plantation Industries and Parliamentary Affairs,
55/75, Vaxhall Lane,
Colombo 2

Dear Sir,

The Committee appointed by you to inquire into the state sector plantations has great pleasure in submitting its report.

The Committee deeply appreciates the confidence entrusted in it to undertake this task.

A.S. Jayawardane (Chairman)
R.S. Jayaratne (Member)
Ajith Goonathilake (Member)
T.P. Gunawardene (Member)
Dr. R.L. de Silva (Member)
G.B. Wickramanayake (Member)

S.M.J. Bandara
(Secretary and Convener)

*எவ்வாறெனினும் மிகவும் தீவிரமான முறையில் காட்டப்பட்டுள்ளவாறு, அந்த எந்தவொரு பரிந்துரைகளையும் கருத்திலே கொள்ளாது எவ்வித கணக்குமின்றி, பொது நிறுவன மறுசீரமைப்பு ஆணைக்குழுவானது சந்தேகத்திற்கிடமானதும் கேள்விக்குமுறைய வகையில், இலங்கை அரசிற்கும் பொது மக்களிற்கும் கூட்டாக நட்டம் ஏற்படும் வகையில் இந்த பெருந்தோட்டங்களை தனியார் மயப்படுத்தியது.*

*சந்தேகத்திற்கிடமான வகையில் இந்த தனியார் மயமாக்கலை நடைமுறைப்படுத்திய பொது நிறுவன மறுசீரமைப்பின் அங்கத்தவர்கள்.*

*இரஞ்சன் ஆசீர்வாதம், தலைவர்,மூத்த பங்காளர், போர்ட் ரோட்ஸ்,தோர்ன்டன் அண்ட் கம்பெனி*
*திலான் விஜேசிங்க, தலைவர், இலங்கை முதலீட்டு சபை*
*சந்திரா ஜயரட்ன, நிர்வாக இயக்குனர், வரையறுக்கப்பட்ட CTC ஈகள் காப்புறுதி நிறுவனம்*
*சமன் கெலகம, நிர்வாகி, கொள்கைக் கல்விக்கான நிறுவனம்*

அரித்த விக்ரமநாயக, பொது நிர்வாகி,பங்குப் பரிவர்த்தனை ஆணைக்குழு
P.B ஜயசுந்தர, நிர்வாகி, பொருளாதார விவகாரங்கள், A .S. ஜெயவர்த்தனவின் பிரதிநிதியாக
A .S. ஜெயவர்த்தன, செயலாளர், திறைசேரி
A . டி வாஸ் குணவர்தன, தலைவர், இலங்கை முதலீட்டு சபை
நிமல் மலலசேகர, பொறியாளர்

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் நம்பிக்கைக்குரியவரான J.M.S. பிரிட்டோ அவர்கள் லண்டனிலிருந்து நிதி திட்டமிடல் அமைச்சிற்கு ஆலோசராக செயற்பட்டதுடன், பெருந்தோட்டத்துறை அமைச்சின் திட்டமிடல் திணைக்கள இயக்குனர் A .ஏக்கநாயக்க அவர்கள் பொது நிறுவன மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் கூட்டங்களில் பங்கெடுத்தார். பொது நிறுவன மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் இயக்குனர் நாயகமாக திரு.இந்திரஜித் குமாரசுவாமி அவர்கள் 1995 மார்ச் முதல் மே வரை கடமையாற்றினார்.!

தேவைக்கேற்ப பொது நிறுவன மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் கூட்டங்களுக்கு பின்வரும் நபர்களும் அழைப்பின் பேரில் பங்கெடுத்தனர், உலக வங்கியின் வதிவிட பிரதிநிதி ரொபேர்ட்டோ பேண்ட்ஜெர்டோட் , ADB ஆலோசகர் பிலிப் மெல்க்யே, மற்றும் உலக வங்கியின் ஆலோசகர்களான R.L. ஆர்சனல்ட், P .திரிவேதி, ஹபீஸ் ஷைக்,ஜோன் ஸ்பீக்மன், யுவான் எல்லியாஸ், டொம் ஹவுஸ்டன்,பார்க்கு காகின், முயீன் பார்ட்லே,R.A. டென்னிஸ் ,ஜோசப் B ப்ரடி, குணேய்டா - பலம்மிக்க குழுவொன்று !

பொது நிறுவன மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் பொறுப்பேற்கப்பட்ட தனியார்மயமாக்கல் திட்டத்திற்கு, உலக வங்கி,USAID, மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பன நிதியுதவி அளித்துள்ளதுடன், வெளிநாட்டு நிபுணர்களைக் கொண்டு தொழிநுட்ப உதவிகளையும் வழங்கி உள்ளன.

இலங்கை அரசிற்கு சொந்தமாக இருந்த நிறுவனங்களே இந்த தோட்டங்களுக்கு உரிமையாளர்களாக இருந்தன. இந்த கம்பெனிகளின் முகாமைத்துவமானது கேள்விக்குரிய முறையிலும் எதேச்சையாகவும் தெரிவு செய்யப்படுகின்ற தனியார் கம்பெனிகள் வசம் இருந்தன இந்த சந்தேகங்களில் 22 பெருந்தோட்ட கம்பெனிகளை உள்ளடக்கிய குழுவாக்கல் இடம்பெற்ற நடைமுறையும் உள்ளடங்கும்.

சூழ்ச்சியான முறையில் அதி கூடிய இலாபம் ஈட்டிய 6 பெருந்தோட்ட கம்பனிகளின் 51% பங்குகள் விருப்பு அடிப்படையில் இந்த முகாமைத்துவ கம்பெனிகளுக்கு விற்கப்பட்டதுடன், உடைத்து வழங்கப்பட்ட 20% இந்த 6 தோட்டங்களின் பங்குகளிற்கு கொழும்பு பங்குபரிவத்தனை மையத்தில் குறைந்த விலையானது கொடுக்கப்பட்டதுடன்,பின்னர் விற்பனை செய்யும் நோக்கில் 29% பங்குகள் இலங்கை அரசினால் தக்க வைக்கப்பட்டன. உடைத்து வழங்கப்பட்ட 20% பங்குகளின் குறைந்த விலையென்பது வெளிப்படையாக சாதாரண விலையான ஒரு பங்கிற்கு ரூபா 10 என்பதாகும்.

மாறாக உடைத்து வழங்கப்பட்ட 20% பங்குகளின் அதி கூடிய பெறுமதியானது, கொழும்பு பங்குபரிவர்த்தன மையத்தில் மற்றைய 51% பங்குகளின் விலையாக இருக்காது, முகாமைத்துவத்தின் கட்டுப்பாட்டிலும் கையிலும் இருக்கின்றபோது, அந்த 51% பங்குகளின் உச்ச பெறுமதியானது 20% பங்குகளின் அதி உச்ச விலையை விடவும் அதிகமாகவே காணப்பட்டன

குறுகிய காலப்பகுதியில் இவ்வாறு விற்கப்பட்ட 6 இலாபமீட்டிய தோட்ட நிறுவனங்களாக, வரையறுக்கப்பட்ட பொகவந்தலாவ தோட்டங்கள், கொட்டகல தோட்டங்கள்,அகலவத்த தோட்டங்கள்,கேகால தோட்டங்கள்,கொட்டகல தோட்டங்கள், மற்றும் களனி பள்ளத்தாக்கு தோட்டங்கள் என்பன அடங்கும்.

இந்த 6 தோட்ட கம்பனிகளினதும்,பொதுவில் முன்வைக்கப்பட்ட விற்பனை ஆவணங்களின் கையொப்பதாரிகளும் இயக்குனர்களுமாக, பெருந்தோட்ட துறை அமைச்சின் செயலாளர், R.S. ஜயரத்ன, உணவு மற்றும் கூட்டுறவு அமைச்சின் செயலாளர்,T.P.G.N. லீலாரத்ன, வெளிவள இயக்குனர் நாயகம் M.F. மொஹைதீன்,பெருந்தோட்டத்துறை அமைச்சின் இயக்குனர் S.A.B. ஏக்கநாயக்க, மற்றும் தனியார் மயமாக்குதலிற்கு பொது நிறுவன மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு உதவியாக இருந்த தோட்டத்துறை முகாமைத்துவ கண்காணிப்பு பிரிவின் இயக்குனராகவிருந்த ரொமேஷ் பண்டார டயஸ் ஆகியோர் காணப்பட்டனர்.

மேலதிகமாக கீழே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு,முன் தெரிவு செய்யப்பட்ட இந்த முகாமைத்துவ கம்பனிகளுக்கு மாற்றக்கூடிய கடன்பத்திர அடிப்படையில் மேலும் இந்த தோட்டங்களிலே முதலீடு செய்வதற்கான பிரத்தியேக வாய்ப்பு வழங்கப்பட்டிருந்ததோடு பின்னர் அவற்றையும் இந்த கம்பெனிகள் அடிப்படை விலையான ஒரு பங்கிற்கு 10 ரூபா என்ற வகையில் பங்குகளாக மாற்றிக்கொண்டமையானது இந்த கம்பனிகளின் பங்கு வீதமானது 51% விட அதிகமாகி இந்த முன்குறித்த நுகர்வோரினால் பங்கு வீதமான 71% வரை சென்றது.

| பெயர் | 51% பங்கு மூலதனம் (மி) | மாற்றக்கூடிய கடன்பத்திரம் (மி) | மாற்றுகையில் பங்கு முதலீடு (மி) | மாற்றுகையில் உரிமைத்துவம் % | சரியான கொள்வனவு விலை (மி) | 20% பங்குகளின் கணிப்பீடு % |
|---|---|---|---|---|---|---|
| வரையறுக்கப்பட்ட அகலவத்த தோட்டங்கள், | 102 | 50 | 152 | 60.8% | 121.6 | 16% |
| வரையறுக்கப்பட்ட ஹொரன தோட்டங்கள் | 102 | 50 | 152 | 60.8% | 121.6 | 16% |
| வரையறுக்கப்பட்ட கேகால தோட்டங்கள், | 102 | 50 | 152 | 60.8% | 121.6 | 16% |
| வரையறுக்கப்பட்ட கொட்டகல தோட்டங்கள் | 102 | 120 | 222 | 69.4% | 138.7 | 12.5% |
| வரையறுக்கப்பட்ட பொகவந்தலாவ தோட்டங்கள், | 102 | 135 | 237 | 70.7% | 141.5 | 11.9% |
| வரையறுக்கப்பட்ட களனி பள்ளத்தாக்கு தோட்டங்கள் | 102 | 140 | 242 | 71.2% | 142.3 | 11.7% |

இந்த முகாமைத்துவ கம்பெனிகளின் பெறுபேறுகளை மதிப்பீடு செய்யும் எந்தவொரு படிமுறைகளையும் இலங்கை அரசானது முன் வைத்திருக்காத நிலையிலும் இவை முகாமைத்துவ கட்டணமாக பெருந்தோட்ட கம்பெனிகளிடம் இருந்து பணம் பெற்றுக்கொண்டன.அறிவிற்கு எட்டாத வகையில் பங்குச் சந்தையில் இந்த பங்குகளின் உடனடி விற்பனை விலையானது மூன்று மடங்கு அதிகரித்தது.

கீழே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு நகைப்பானதும் அபத்தமுமான முறையில் தவறாக வழிநடத்தப்பட்ட 51% பங்குகளின் ஆரம்ப விற்பனைக்கும் பின்னர் மேற்குறித்தவாறு அதிகரிக்கப்பட்டதுமான "நிறுத்த விலை சூத்திரமானது" இலங்கை அரசிற்கும் பொது மக்களிற்கும் கூட்டாக பாரிய நஷ்ட்டத்தை கொண்டு வந்தது.

## RECKONED ESTIMATED LOSSES SIMULATED

| NAME | EFFECTIVE OWNERSHIP % SOLD | EFFECTIVE SALES PRICE | SHARE VALUATIONS OF OWNERSHIP % SOLD At Price/Earnings Ratios | | | RECKONED ESTIMATED LOSSES At Price/Earnings Ratios | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 8 | 10 | 12 | 8 | 10 | 12 |
| | % | Rs. M. | Rs. M. | Rs. M. | Rs. M. | Rs. M. | Rs. M. | Rs. M. |
| Agalawatte Plantations Ltd. | 60.8% | 121.6 | 403 | 503 | 604 | 281 | 382 | 483 |
| Horana Plantations Ltd. | 60.8% | 121.6 | 227 | 284 | 340 | 105 | 162 | 219 |
| Kegalle Plantations Ltd. | 60.8% | 121.6 | 383 | 479 | 575 | 262 | 358 | 454 |
| Kotagala Plantations Ltd. | 69.4% | 138.7 | 705 | 881 | 1,057 | 566 | 742 | 919 |
| Bogawantalawa Plantations Ltd. | 70.7% | 141.5 | 467 | 583 | 700 | 325 | 442 | 559 |
| Kelani Valley Plantations Ltd. | 71.2% | 142.3 | 375 | 469 | 563 | 233 | 327 | 421 |
| | | 787.3 | 2,559 | 3,199 | 3,840 | 1,772 | 2,412 | 3,053 |
| Add: Premia for controlling interests of 60.8% - 71.2% [PE 8-20%, PE 10-15%, PE 12-10%] | | | 512 | 480 | 384 | 512 | 480 | 384 |
| | | | 3,071 | 3,679 | 4,224 | 2,284 | 2,892 | 3,437 |

கொழும்பு பங்குச் சந்தையில் எவ்வித போட்டித்தன்மையோ அல்லது கேள்விமனுவோ இல்லாது வெளிப்படையுமின்றி கேள்விக்குரிய முறையில் நகைப்பிற்கிடமாக இலாபமீட்டும் கம்பெனிகளின் பங்குகளானது அடித்தள விலையான பங்கிற்கு 10 ரூபா என்ற வகையில் விற்றமை தொடர்பிலான மேற்குறித்த நடவடிக்கைகள் தொடர்பில் நூலாசிரியர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவர்களிடம் பலமான சமர்ப்பிப்புகளை செய்திருந்தார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவர்கள் உடனடியாக செயற்பட்டு இந்த பங்குத்தொகை விற்பனவை தடி செய்ததோடு, மேற்குறித்த பெருந்தோட்ட கம்பனிகளின் 51% பங்குகளின் விற்பனையானது கொழும்பு பங்கு பரிவர்த்தனை ஊடாக போட்டித்தன்மையான விலைமனு கோரலின் அடிப்படியில் விற்கப்பட வேண்டும் என உத்தரவு பிறப்பித்தார்.

மேற்குறித்தவாறு இலாபம் ஈட்டும் கம்பெனிகளின் 51% பங்குகளானது 102மில்லியன் ரூபவாக இருந்தபோது நட்டத்தில் இயங்கிய வட்டவல தோட்டத்தின் பங்குகள் ரூபா 306 மில்லியனாக கணிக்கப்பட்டது. கீழே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு தொடர்ந்து இடம்பெற்ற இந்த பெருந்தோட்ட கம்பெனிகளின் விற்பனவானது ரூபா 622.2 மில்லியனாக தேறியது .

Privatisation details

| Name of plantation Phase 1 | 51% stake bidder | 51% stake method | 51% stake No. of shares (m) | 51% stake price/ share (SLR) | 51% stake Revenue (SLRm) | 20% IPO status | Revenue from 20% (SLRm) | IPO price (SLR) | 19% sale | 19% sale price/ share (SLR) | Revenue from 19% (SLRm) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Kotagala | George Steuarts MSL | Sold to Manager | 10.2 | 10.00 | 102.0 | Listed | 40 | 10 | Not complete | | |
| Bogawantalawa | Metropolitan MSL | Sold to Manager | 10.2 | 10.00 | 102.0 | Listed | 40 | 10 | Completed | 37.5 | 140.8 |
| Kegalle | RPK MSL | Sold to Manager | 10.2 | 10.00 | 102.0 | Listed | 40 | 10 | Completed | 31.5 | 118.2 |
| Agalawatte | Mackwoods PL | Sold to Manager | 10.2 | 10.00 | 102.0 | Listed | 40 | 10 | Completed | 35.5 | 133.3 |
| Horana | Ceyexxe PL | Sold to Manager | 10.2 | 10.00 | 102.0 | Listed | 40 | 10 | Completed | 32.0 | 120.1 |
| Kelani valley | DPL PL | Sold to Manager | 10.2 | 10.00 | 102.0 | Listed | 40 | 10 | Completed | 32.7 | 122.9 |
| **Phase 2** | | | | | | | | | | | |
| Watawala | Estate Mgt. Services Ltd | Sold on CSE | 10.2 | 30.00 | 306.0 | Listed | 60 | 15 | Completed | 61.0 | 231.8 |
| Maskeliya | RPK MSL | Sold on CSE | 10.2 | 21.50 | 219.3 | Listed | 60 | 15 | Completed | 45.0 | 171.0 |
| Madulsima | Stassen | Sold on CSE | 10.2 | 10.00 | 102.0 | Listed | 60 | 15 | Not complete | | |
| Agarapatana | Lankem PL Hold. | Sold on CSE | 7.59 | 35.25 | 267.5 | To be listed | | | Not complete | | |
| Hapugastenna | PIMC* | Sold on CSE | 10.2 | 23.75 | 242.3 | Listed | 40 | 10 | Not complete | | |
| Balangoda | Distilleries Co. | Sold on CSE | 10.2 | 41.25 | 420.8 | Listed | 80 | 20 | Completed | 40.5 | 153.9 |
| Uda Pussellawa | PIMC* | Sold on CSE | 4.84 | 65.25 | 315.8 | Listed | 19.2 | 10 | Not complete | | |
| **Phase 3** | | | | | | | | | | | |
| Mathurata | Employees Trust Fund | Sold on CSE | 10.2 | 45.75 | 466.7 | To be listed | | | Not complete | | |
| Elpitiya | Aitken Spence PL Mgt. | Sold on CSE | 10.2 | 30.25 | 308.6 | To be listed | | | Not complete | | |
| Namunukula | Keells PL Mgt. Services | Sold on CSE | 10.2 | 40.00 | 408.0 | To be listed | | | Not complete | | |
| Kahawatte | Forbes Plantation Ltd. | Sold on CSE | 10.2 | 30.25 | 308.6 | To be listed | | | Not complete | | |
| Malwatte Valley | Wayamba Plantation | Sold on CSE | 10.2 | 61.00 | 622.2 | To be listed | | | Not complete | | |
| Talawakelle + | Hayleys Ltd. | Offered to Manager | 10.2 | 40.00 | 408.0 | To be listed | | | Not complete | | |
| Pussellawa + | Free Lanka Mgt. | Offered to Manager | 10.2 | 39.00 | 397.8 | To be listed | | | Not complete | | |
| Sub total of funds raised (SLRm) | | | | | 5,405.4 | | 559.2 | | | | 1,192.0 |
| **Total funds raised (SLRm)** | | | | | | | | | | | **7,156.6** |

Note : MSL - Management Services Ltd., PL - Plantation

* PIMC - Plantation Investment & Management Co. previously government owned now 100% held by James Finliy & Co.

+ The terms of these two plantattions, which should have been sold under phase 1, had to be renegotiated before the sale was concluded under new conditions.
Elkaduwa, Chilaw and Wayamba plantations which make up the 23 regional plantations are not finalised for sale.

*Source : Public Enterprises Reform Commission*

தேசிய நலன் கருதி இலங்கை அரசிற்காக ஒதுக்கப்பட்ட தங்க பங்குகள் அதன் உண்மையான நிலையை எய்தவில்லை மாறாக இவை சாதாரண பங்குகளாக கணிக்கப்பட்டதோடு, இந்த கம்பெனிகளின் எழுச்சிக்கும் வீழ்ச்சிக்கும் காரணமாக இருக்கும் மனித வளங்களான கம்பெனி ஊழியர்களுக்கென பெருந்தோட்ட கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட 10% பங்குகள் வழங்கப்படவில்லை.

இப்புத்தகத்தில் மேலுமொரு அதிர்ச்சியூட்டும் விடயமாக பதியப்பட்டுள்ளதாவது, எவ்வித வெளிப்படைத்தன்மையுமின்றி பெருந்தோட்ட முகாமைத்துவ கம்பெனிகளுக்காக பெருந்தோட்ட கம்பெனிகளின் 51% பங்குகளை பெற்றுக்கொள்வதற்காக மும்முரமாக இலங்கை தோட்ட உரிமையாளர்களின் சங்கமானது செயற்பட்டது என்பதாகும்.

INCORPORATED
Telegraphic Address :— "PACK" COLOMBO
Telephone :— COLOMBO, 567013
Code :— BENTLEY'S

32. Vajira Road,
P. O. Box 855,
COLOMBO 5.
SRI LANKA

PROPOSED MANAGEMENT AND EQUITY AGREEMENT

1 Divestiture of the shares of the RPCs to be made with the

JUSTIFICATION SUPPORTING THE PROPOSED METHOD OF DIVESTITURE

1 The PMCs have taken the risks associated with initial entry,

M J C Amarasuriya
CHAIRMAN
PLANTATION MANAGEMENT COMMITTEE

3 February 1994

வெளிப்படுத்தப்பட்ட மற்றுமொரு உண்மை யாதெனில்,தோட்டத்துக்காரி முகாமைத்துவ கண்காணிப்பு பிரிவின் இயக்குனர் பொறுப்பற்ற வகையில் இந்த பெருந்தோட்ட கம்பெனிகளை நலம் கருதி முகாமைத்துவ கம்பெனிகளை இல்லை மாறாக இந்த பங்குகளை வாங்கும்படியான உடன்படிக்கை ஒன்று அவர்களுக்கிடையே இருந்தது என தெரிவித்திருந்தார்.

மிகவும் துல்லியமாக விசாரணை செய்யப்பட்ட இவ்வாறான இரண்டு பெருந்தோட்ட கம்பெனிகளின் தனியார்மயமாக்கம் இந்த புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.ஒன்று வரையறுக்கப்பட்ட களனி பள்ளத்தாக்கு கம்பெனியின் விற்பனை மற்றயது வரையறுக்கப்பட்ட கொட்டகளகம்பெனியின் விற்பனை என்பனவாகும்.

வரையறுக்கப்பட்ட களனி பள்ளத்தாக்கு தோட்டமானது,இந்த நகைப்பிற்குரிய புத்தியற்ற 102 ரூபாவுக்கு விற்கப்பட்ட கம்பெனிகளில் ஒன்றாக காணப்பட்டதோடு, விற்பனையின் பின்னர் 2 1/2 வருடங்களில் ரூபா 418 மில்லியனை தேறிய இலாபமாக ஈட்டியதுடன் வரையறுக்கப்பட்ட DPL பெருந்தோட்டம் எனும் கம்பெனிக்கு இந்த 2 வருடங்களில் ரூபா 53 மில்லியனை முகாமைத்துவ கட்டணமாக செலுத்தியுள்ளதும் அதிர்ச்சிகரமான வெளிப்பாடாகும்.

இதை விடவும் மேலான அதிர்ச்சியாக இந்த நிறுத்தும் விலை சூத்திரமாக அறியப்பட்ட சூத்திரமானது வேண்டுமென்றே மோசடியாக தயாரிக்கப்பட்டதுடன், இந்த தனியார்மயமாக்கலை ஊக்குவித்த ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆலோசகராகவிருந்த பிலிப் மேல்க்கி அவர்களும் உடந்தையாக இருந்துள்ளார் என்பதாகும்.

நூலாசிரியர் தனது முழுமையான விசாரணைகளின்படி, வரையறுக்கப்பட்ட களனி பள்ளத்தாக்கு தோட்டத்தை வாங்கிய வரையறுக்கப்பட்ட DPL தோட்டங்களின் 60% பங்குகளை வரையறுக்கப்பட்ட தனியார் விவசாய அபிவிருத்தி சேவைகள் எனும் சிங்கப்பூர் நிறுவனம் உரிமை கொண்டிருந்ததுடன் அந்த நிறுவனத்தில் பிலிப் மேல்க்கி ஒரு இயக்குனராகவும் பிரதான பங்குதாரராகவும் இருந்ததை வெளிக்கொண்டு வந்துள்ளார். ஆதாரம்

PHILIP R. MELKYE
Director

Agricultural Development Services
(Singapore) Pte. Ltd.

3 Shenton Way #25-05A,
Shenton House
Singapore 0106
Tel : 2248286
Fax : 2253772
Telex : RS 39237 ADSADS

ADB Plantations Project
Colombo Marriott Hotel
64 Lotus Road
Colombo 1, Sri Lanka
Tel : 94-1-544-544
Fax : 94-1-449-875

TIMOTHY HOOPER
Investment Banking Specialist

Agricultural Development Services
(Singapore) Pte. Ltd.

3 Shenton Way #25-05A,
Shenton House
Singapore 0106
Tel : 2248266
Fax : 2253772
Telex : RS 39237 ADSADS

ADB Plantations Project
Colombo Marriott Hotel
64 Lotus Road
Colombo 1, Sri Lanka
Tel : 94-1-544-544
Fax : 94-1-449-875

REGISTRY OF COMPANIES AND BUSINESSES
INSTANT INFORMATION (BUSINESS PROFILE)

WHILST EVERY ENDEAVOUR IS MADE TO ENSURE THAT THE INFORMATION PROVIDED IS UPDATED & CORRECT, THE REGISTRY DISCLAIMS ANY LIABILITY FOR ANY DAMAGE OR LOSS THAT MAY BE CAUSED AS A RESULT OF ANY ERROR OR OMISSION.

THE FOLLOWING ARE THE BRIEF PARTICULARS OF:

AGRICULTURAL DEVELOPMENT SERVICES (SINGAPORE) PTE LTD

DATE OF CHANGE OF NAME: -

REG NO: 198002659H DATE OF REG: 08.08.1980

TYPE OF COMPANY : LIMITED EXEMPT PRIVATE COMPANY

REGISTERED OFFICE ADDRESS
1 COLOMBO COURT
#06-19

SINGAPORE (179742)

DATE OF CHANGE OF ADDRESS: 22.01.1990

PRINCIPAL ACTIVITY(IES):

1 BUSINESS MANAGEMENT & CONSULTANCY SERVICES

STATUS : LIVE COMPANY
EFFECTIVE DATE: -

| | AMOUNT | V/SHARE | CURRENCY |
|---|---|---|---|
| AUTHORISED CAPITAL: | 200,000.00 | 1.0000 | SINGAPORE DOLLAR |
| ISSUED ORDINARY : | 66,562.00 | 1.0000 | SINGAPORE DOLLAR |
| PAID-UP ORDINARY : | 66,562.00 | 1.0000 | SINGAPORE DOLLAR |

4) NAME : PHILIP REGINALD MELKYE
SHAREHOLDER ID : E6168260
NATIONALITY : AMERICAN
SHAREHOLDER ADDRESS :
28 TEMENGGONG ROAD
-
-
SINGAPORE (099775)
DATE OF CHANGE OF ADDRESS :01.03.1991

| | NO OF SHARES | V/SHARE | CURRENCY |
|---|---|---|---|
| ORDINARY | 39,562 | 1.0000 | SINGAPORE DOLLAR |

இந்த நடவடிக்கையானது ஆசிய அபிவிருத்தி வங்கியை பொறுத்தவரை ஒரு வெட்கமாக சங்கடமான ஒன்றாகும் அதேவேளை இலங்கை அரசிற்கும் பொது மக்களிற்கும் ஏற்பட்ட கூட்டு நஷ்டத்திற்கு அவர்கள் பொறுப்பு கூற வேண்டும். ஹெய்லிஸ் குழுமத்தின் அன்றைய தலைவரான சுனில் மெண்டிஸ் அவர்கள் பின்னர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

விசாரணை செய்யப்பட்ட 51% பங்குகள் ரூபா 102 மில்லியனுக்கு விற்கப்பட்ட இலாபமீட்டும் 6 கம்பெனிகளில் ஒன்றான கொட்டகள தோட்டங்கள் இரண்டாவது கம்பெனியாக இங்கே குறிப்பிடப்பட்டுள்ளது.

கொட்டக்கள தோட்டங்களானது, இலங்கை வணிக வங்கியானது 35% பங்குகளை தன்னகத்தே வைத்திருந்த 100% ஜோர்ஜ் ஸ்டுவர்ட் & கோ வின் துணை நிறுவனமான ஜோர்ஜ் ஸ்டுவர்ட் முகாமைத்துவ சேவைகள் எனும் நிறுவனத்தினால் நிர்வகிக்கப்பட்டு வந்தது.

கொட்டக்கள தோட்டங்களின் தனியார்மயமாக்களின் கொடுக்கல் வாங்கல்களை இலங்கை வணிக வங்கி கையாண்டிருந்த அதே சமயம், அதன் தலைவராக இருந்த ராஜன் ஆசீர்வாதம் அவர்கள் KPMG Ford Rhodes Thornton &CO வின் சிரேஷ்ட பங்காளியாவும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் நம்பிக்கைக்குரியவராகவும் இருந்தார்.

இவர் பெருந்தோட்ட நிறுவனங்களின் தனியார்மயமாக்கலை கையாண்ட பொது நிறுவன மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் தலைவராகவும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் நியமிக்கப்பட்டார். இந்த முரண்பாடுகளை கவனத்தில் எடுக்காது இலங்கை வணிக வங்கியானது கொட்டக்கள தோட்டங்களை விருப்பு அடிப்படையில் ஜோர்ஜ் ஸ்டுவர்ட் முகாமைத்துவ சேவைகள் நிறுவனத்திற்காக கொள்வனவு செய்யும் உடன்படிக்கையை மேற்கொண்டிருந்தது.

ஆனால் உண்மையில் வெளியாக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் கொட்டக்கலை தோட்டங்களின் 51% பங்குகளை ரூபா 223 மில்லியனிற்கு ஒப்பந்தம் ஒன்றின் அடிப்படையில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் ஒன்றியமே கொள்வனவு செய்திருந்தது,இந்த ஒன்றியத்தை KPMG Ford Rhodes

Thornton &CO வின் பங்காளியான திரு. M.R. மிகுலார் அவர்கள் பிரதிநிதித்துவம் செய்தமையானது மேலும் முரண்பாடுகளை அதிகரிக்கச் செய்தது. ஆதாரம்

a) in the case of the investors and GSMS it is addressed to

KPMG Ford, Rhodes Thornton & Co..
32A. Sir Macan Markar Mawatha
Colombo 3

for Attention : Mr. M R Mihular

and in the case of GSL it is addressed to:

Steuart House
45. Janadhipathi Mawatha
Colombo 1

for Attention : Mr. K M de Silva

மேற்குறித்தவற்றின் அடிப்படையில் கொட்டக்கலை தோட்டத்தின் 51% பங்குகளின் விற்பனைக்காக இலங்கை அரசாங்கத்திற்கு ரூபா 102 மில்லியனை ஜோர்ஜ் ஸ்டூவர்ட் முகாமைத்துவ சேவை நிறுவனத்தினால் வழங்கப்பட்டிருந்ததோடு, இலங்கை வணிக வங்கியினால் கட்டமைக்கப்பட்டிருந்த வகையில் ஜோர்ஜ் ஸ்டூவர்ட் முகாமைத்துவ சேவைகள் நிறுவனமானது உடனடி இலாபமாக 100% இற்கு மேலாக 100 மில்லியனை பெற்றதுடன் கட்டமைப்பை வழங்கியதற்காக 4.3 மில்லியன் ரூபாய்கள் இலங்கை வணிக வங்கிக்கு செலுத்தப்பட்டிருந்தது. ஆதாரம்

Merchant Bank of
Sri Lanka Limited
P.O. Box 1987

**Private & Confidential**

20th December, 1995

Ref.No: MBSL/CF/95/567

Mr. Keerthi De Silva
Director - Finance
**George Steuart & Co.Ltd**
45 Janadhipathi Mawatha
Colombo - 1.

Dear Sir,

**ACKNOWLEDGEMENT OF FEES**

Please find enclosed the official receipt, details of which are given below:-

| | |
|---|---|
| George Steuart & Co Ltd<br>Corporate Finance & Legal Fees | Rs. 1,705,575.44 |
| George Steuart Management Services (pvt) Ltd<br>Fees for structuring the deal | Rs. 2,600,000.00 |
| Total | Rs. 4,305,575.44 |

Thanking You

Yours Faithfully

**A.M.A.Cader**
**Manager - Corporate Finance**

189, Galle Road, Colombo 3, Sri Lanka. Telephone: 423800
Telex: 23245 MERBNK CE Fax: 423799 Cable: MERCHBANK
Board of Directors: R. N. Asirwatham (Chairman) Changa J. Samaraweera (Managing Director)
Mrs. R. L. Nanayakkara. M. N. Cader, G. M. Z. Khan, M. T. L. Fernando, Deshabandu Karunaratne Jayasuriya.

கொட்டக்கலை தோட்டங்களின் மேற்குறித்த 51% பங்கு பரிமாற்றங்களானது திறந்த பத்திரிகைகளில் வைக்கப்பட்டிருந்தன. அதனை தொடர்ந்து இந்த பங்குகள் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் ஒன்றியத்தினால் வரையறுக்கப்பட்ட லங்கெம் சிலோன் நிறுவனத்திற்கு 400 மில்லியன் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டதன் மூலம் உடனடி இலாபமாக 200 மில்லியனை பெற்றுக்கொண்டார்கள்.

கொட்டக்கலை தோட்டமானது அந்த நேரத்தில் 200மில்லியன் திரவ பணத்தை கொண்டிருந்ததால் மற்றுமொரு தனியார் மயமாக்கப்பட்ட கம்பெனியான அக்கரபத்தன தோட்டத்தினை கொள்வனவு செய்தது.

இலங்கை வணிக வங்கியினால் கட்டமைக்கப்பட்ட இந்த கொடுக்கல் வாங்கல் முறைமையானது நாணயமாற்று கட்டுப்பாட்டு சட்டத்திற்கு முரணானது என்ற வகையில் நாணயமாற்று கட்டுப்பாட்டாளரினால் கொடுக்கப்பட்ட தண்டப் பண கட்டணத்தினை இலங்கை வணிக வங்கி உள்ளிட்டோர் செலுத்தியமையானது, நாணயமாற்று கட்டுப்பாட்டு சட்ட விதிகளை மீறினார்கள் என்பதனை ஒப்புகொண்டமைக்கு ஆதாரமாகும்!

கடந்த அரசாங்க காலத்தின் போது இடம்பெற்ற தனியார் மயமாக்கல் தொடர்பில் தேர்தல் மேடைகளில் விமர்சனம் செய்து தமது ஆட்சியில் வெளிப்படையான போட்டிமிக்க தனியார் மயமாக்கல் இடம்பெறும் என கூறி 1994ம் ஆண்டு சந்திரிகா குமாரதுங்கவின் அரசாங்கம் பதவியேற்றிருந்தது. எனினும் மேற்குறித்த நடவடிக்கையானது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்கும் அவரச அரசிற்கும் ஒரு சங்கடமான நிலைமையை உருவாக்கிற்று.

"இவ்வாறான நேர்மையற்ற மோசடிக்கு இடமில்லை" என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவர்கள் இது குறித்து கீழ் வரும் கண்டனத்தை கூறியிருந்தார்கள். எனினும் வெறும் வார்த்தைகள் மாத்திரமே பேசப்பட்டது மாறாக எந்தவொரு நடவடிக்கையும் இந்த நேர்மையற்ற மோசடி தொடர்பில் எடுக்கப்படவில்லை. இது அவரது நம்பிக்கைக்குரியவர்கள் ஈடுப்பட்டிருந்தமைதான், நடவடிக்கைகள் எடுக்காமல் இருந்ததற்கு காரணமா என்ற கேள்வியையும் எழுப்புகிறது.

இலங்கை அரசிற்கும் பொதுமக்களிற்கும் பாரிய நஷ்டம் ஏற்படும் வகையில் செயற்பட்டு இந்த தனியார்மயமாக்கலை நடாத்திய IMF, உலக வங்கி, மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பவற்றின் மீது நடவடிக்கை எடுக்காமல் இருப்பது எவ்வாறு இடம்பெற்றது.

மேற்குறித்த காரியமானது அரசியல் பலமும், அரசியல்வாதிகளின் எடுபிடிகளாகவும் இருப்போர் எவ்வித வெட்கமும் இன்றி ஊழல் மோசடியில் ஈடுபடுவதானது வெறுக்கத்தக்க ஒரு அவமானமாகும். இவை 1994ம் ஆண்டு ஊழல் சட்டம் திருத்தப்பட்டு ஜனாதிபதி சந்திரிக்கா அரசாங்கமானது அவர்கள் மோசடியை குற்றம் என பட்டியலிட்டு ஊழலிற்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுப்பதன் மூலம் ஊழலை இல்லாதொழிக்க முயற்சி செய்ததன் பின்னரான 1995ம் ஆண்டின் இறுதி காலப்பகுதியில் இடம்பெற்றவை ஆகும் என்பதனையும் வெளிக்காட்டுகிறது

எவ்வாறெனினும் இந்த தந்திரமான மோசடியில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக சட்டம் நிலை நாட்டப்படவில்லை என்பது மாத்திரம் அல்ல செய்தவர்கள் பொறுப்புக்கூறவோ கணக்கொப்புவிக்கவோ சட்டத்தின் சார்பில் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை, என்பதனை மேற்குறித்த சம்பவம் எடுத்தது காட்டுகிறது. 1982ம் ஆண்டின் 12ம் இலக்க பொது சொத்து சட்டத்தின் பிரகாரம், பொது சொத்திற்கு நட்டம் விளைவிப்பது பொது சொத்திற்கெதிராக செய்யப்படுகின்ற குற்றமாகும்.

இப்புத்தகமானது அரச நிறுவனங்கள் மாத்திரமல்லாது தனியார் நிறுவனங்களும் அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்படும் வகையில் தமது இலாபத்தை கருத்திற்கொண்டு வெட்கமின்றி ஊழல் சக்கரத்தில் சுற்றுகின்றன என்பதனை வெளிக்காட்டுகிறது. ஊழலை இல்லாதொழிப்போம் என்றஅரசியல் மேடை கோஷங்களோடு அதிகாரத்திற்கு வந்தாலும் அதிகாரம் கையில் இருக்கின்ற போது அதே நபர்கள் ஊழல்களிற்கு மண்டியிடுகிறார்கள்.

மிகவும் விசேடமாக இந்த பெருந்தோட்ட நிறுவனங்கள் தனியார்மயமாக்கப்பட்டமையானது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாகவும் அவரது தாயார் சிறிமாவோ பண்டாரநாயக்க பிரதமராகவும் 1974ல் இதே நிறுவனங்களை தேசிய மயமாக்கிய அறிக்கையை வெளியிட்ட பெர்னார்ட் சொய்சா அவர்கள் சிரேஷ்ட அமைச்சரவை அமைச்சராகவும் இருந்தபோது இடம்பெற்ற ஒன்றாகும். இவர்கள் இதற்க்கு உடந்தையாக இருந்தமையானது உண்மையை பெரியளவில் பேசுகின்றது.

***மேலதிக தகவல்களிற்கு : [http://www.consultants21.com/fraud-&-corruption-exposure-new.php](http://www.consultants21.com/fraud-&-corruption-exposure-new.php)***